# பனிவிழும் கடலை வனம்



கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி அருகில் உள்ள ஜக்கார்பாளையம் கிராமப் பகுதியில் “பனிக்கடலை” எனப்படும் கொண்டைக்கடலையைப் பயிர் செய்து வரும் விவசாயிகள்.லேசான ஈரம் இருந்தால் போதும். அதை முழுமையாக உள்ளிழுத்து, நீண்ட நேரத்துக்கு தன்னுள் தேக்கி வைக்கும் தன்மைக் கொண்டது கரிசல் மண், அந்த வகையில் மார்கழி மாதத்தில் கொட்டோ கொட்டு எனக் கொட்டும் பனியைத் தேக்கி வைத்துக் கொள்ளும் கரிசல் பூமி, என்ன வெயில் அடித்தாலும் முழுக்க காய்ந்து விடாமல் லேசாக ஈரம் காத்துக் கொண்டே இருக்கும். இது தான் இந்த விவசாயிகளுக்கு கைக்கொடுக்கிறது. பனிக்கடலை வெள்ளாமையை நீண்டகாலமாக மேற்கொண்டிருக்கும் ஜக்கார்பாளையத்தைச் சேர்ந்த இளம் விவசாயி விவேகானந்தன் (அலைபேசி : 99654 63762) எனக்குச் சொந்த பூமி, குத்தகை நிலம் எல்லாம் சேர்த்து பதினான்கு ஏக்கர்ல கொண்டைக் கடலை சாகுபடி செய்றேன்.

பனிக்கடலை நாட்டு இரகத்தைச் சேர்ந்தது. ஒரு ஏக்கர் நிலத்துக்கு 45 கிலோ விதைகள் தேவைப்படும். அறுவடை செய்யும் போது நல்ல நிறம் கொண்ட ஊக்கமுள்ள, பிஞ்சுக்கடலை இல்லாத, சுத்தமான கடலைகளை தரம் பார்த்து தேர்ந்தெடுக்க வேண்டும். அவற்றை நான்கு அல்லது ஐந்து நாட்கள் நிழலில் உலர்த்தி சேமிக்கவேண்டும்.பனிக்கடலை விவசாயத்தைப் பொறுத்தவரை ஒரே பட்டம் தான். இது ஐப்பசி இரண்டாம் வாரத்தில் விதைத்து, தை இரண்டாம் வாரத்தில் அறுவடைக்கு வரும் 90 நாள் பயிராகும். விதைப்பைப் பொறுத்து பங்குனியில் கூட அறுவடை நடக்கும்.மண் பொலபொலப்பாகும் அளவுக்கு நன்றாக நான்கு தடவை உழவு செய்யவேண்டும். கடைசி உழவுக்கு முன்பு, கோழி எருவை இறைத்தால் அடியுரமாக பயன்படும் கூடவே ஒரு மூட்டை தழை, மணி, சாம்பல் சத்து கொண்ட உரம் இடுவது நலம். பின்னர் உழவுச்சாலில் விதைப்புச் செய்யவேண்டும்.

விதைத்த மூன்றாவது வாரத்தில் ஒரு களை எடுக்கவேண்டும் 40ம் நாளில் செடிகள் பூவெடுத்து நிற்கும். 60ஆம் நாளுக்குள் பூவெல்லாம் காய்களாகிவிடும். இந்தச் சமயத்தில் பச்சைப் புழுக்கள் கூட்டம் கூட்டமாக மேயத் துவங்கும். அதனால் 40 மற்றும் 60ம் நாட்களுக்குள் இரண்டு தடவை பூச்சிக்கொல்லி தெளிக்கவேண்டும். வானம் மந்தமாக இருந்தால் 70ம் நாளுக்குள் கூடுதலாக இன்னொரு தடவை பூச்சிக்கொல்லி அடிக்கவேண்டும். 90ம் நாளில் செடி கொள்ளாத அளவுக்கு செம்மண் பூசியது போல் காய்கள் காட்சி தரும்.அடுத்து, அறுவடை தான். காலை 10.00 மணிக்கு மேல் வெயில் எரிக்கத் தொடங்கும். இந்த நேரத்தில் அறுவடை செய்தால் செடிகளில் உள்ள காய்கள் அனைத்தும் உதிர்ந்து விடும். எனவே பனிப்பதம் கொண்ட அதிகாலை நேரத்தில் செடிகளைப் பிடுங்கி அம்பாரம் போடுவது சிறந்தது. பின்பு

அறுவடை இயந்திரத்தைக் கொண்டு அடித்துத் தள்ள வேண்டியது தான். இதற்கு ஒரு மணி நேரத்துக்கு வாடகை ரூ. 700.

கொண்டைக் கடலையை தரம் பிரிப்பது மிக அவசியம். இதன் மூலம் பதர் இல்லாத ஒரே சீரான கடலையைத் தேர்ந்தெடுத்து விற்க முடியும். ஏக்கருக்கு சராசரியாக 7 முதல் 10 முட்டைகள் வரை மகசூல் கிடைக்கும் (700 முதல் 1000 கிலோ வரை) கடந்த பங்குனி மாத நிலவரப்படி ஒரு கிலோ தடவை 27 ரூபாய் வரை விலை போனது. நான் 700 கிலோ மகசூல் எடுத்தேன். இதன் மூலம் 18,900 ரூபாய் வருமானம் கிடைத்தது.விற்பனை என்று பார்த்தால், இந்தக் கடலைக்கு எப்போதுமே கிராக்கிதான். ஒரு ஆண்டு வரை கூட வைத்திருந்து விற்பனை செய்யலாம். ஆடி மாதம் தொடங்கி தை முடிய தொடர்ந்து பண்டிகை நாட்கள் வருவதால் கூடுதல் கிராக்கிதான். விற்பனைக்கு எங்கும் செல்லவேண்டாம். களத்து மேட்டுக்கே வியாபாரிகள் வந்து கொள்முதல் செய்து போகிறார்கள்.

ஒரு ஏக்கரில் பனிக்கடலை சாகுபடி செய்ய செலவு - வரவு கணக்கு

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| தொழு உரம் 2 டன் | 1,500 | |
| தழை, மணி, சாம்பல் உரம் ஒரு மூட்டை | 500 | |
| முதல் மூன்று உழவு | 450 | |
| விதை 45 கிலோ | 1,300 | |
| விதை ‘சால்’ இடும் செலவு | 300 | |
| களை | 500 | |
| 3 முறை பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் தெளிப்பு செலவு (120 மில்லி) | 800 | |
| அறுவடைக்கூலி | 700 | |
| இயந்திர வாடகை | 700 | |
| சுத்தம் செய்து தரம் பிரித்தல் | 400 | |
| மகசூல் 700 கிலோ ரூ. 27 x 700 கிலோ | | 18,900 |
| மொத்தம் | 7,150 | 18,900 |
| நிகர லாபம் | | 11,750 |

அறுவடை மெஷினில் செடிங்களை போட்டா, தூள் தூளாத்தான் வெளிய வருது. மூட்டையில பிடிச்சி வெச்சி, மாடுங்களுக்குக் கொடுக்கிறோம். இது ஊட்டச்சத்து நிறைஞ்சிருக்கற ஒரு கடலை. நம்ம இளவட்டங்க.. இதைத் தண்ணியில ஊற வெச்சி, காலையில வெறும் வயித்துல மென்னு தின்னுட்டு உடற்பயிற்சி செய்றதப் பார்த்திருப்பீங்க. அவ்வளவு சத்து இதுல நிறைஞ்சிருக்கு என்று கூடுதல் சிறப்புகளை சொன்னார்.தை மாதப் பனியில் தலை நடுங்கும், மாசிப் பனியில மரம் நடுங்கும் என்பார்கள் அப்படிப்பட்ட நேரத்திலும் செழித்து வளர்ந்து கை கொடுக்கும் பனிக்கடலை போன்ற பழமையான வேளாண் யுத்திகள் இன்னும் ஜீவனுடன் இருப்பது ஆச்சர்யமே !